இன்றைக்கு கடலுக்கு
இரண்டு பேரும் போவோமா
பந்தை நான் வீசுவேன்
பிடித்துக் கொண்டு ஓடி வா
நாய்க்குட்டி....

என்னோடு பந்தயம்
ஓடுவாயா நாய்க்குட்டி?
என்னுடன் அருகிலே
தூங்குவாயா நாய்க்குட்டி?
நாய்க்குட்டி....

## கரடி

சின்னச் சின்னக் கரடியாரே
கிட்ட வாருங்கோ – என்
சின்னக் கையால் உங்களை நான்
தொட்டுப் பார்க்கவே

*

சின்னச் சின்னக் கரடியாரே
நடந்து காட்டுங்கோ – என்
சின்னக் காலால் உங்களோடு
நானும் நடக்கவே

*

சின்னச் சின்னக் கரடியாரே
கையை நீட்டுங்கோ – என்
சின்னக் கையைப் பிடித்துக் கொண்டு
துள்ளி ஆடுங்கோ

*

சின்னச் சின்னக் கரடியாரே
பந்தைப் பிடியுங்கோ – நாம்
இரண்டு பேரும் பந்தெறிந்து
விளையாடவே

*

சின்னச் சின்னக் கரடியாரே
உள்ளே வாருங்கோ – என்
சின்னக் கட்டில் மேலே நாங்கள்
துள்ளி ஏறவே!



# பாப்பா பாரதி பாடல் புத்தகம்

# PAAPAA BHARATHI SONG BOOK



மாவை நித்தியானந்தன்

**PAAPAA BHARATHI SONG BOOK**
**by Mavai Nithianandan**

**COPYRIGHT © 1996 by Author.**

This book contains songs from
**'Paapaa Bharathi' Children's Video parts 1, 2 and 3.**

**Published by**
Bharathi Academy,
P.O. Box 1357,
Clayton South,
Victoria 3169,
Australia.

Phone (613) 9551 2903

## இந் நூலில் உள்ள பாடல்கள்

வாருங்கள் வாருங்கள்
வானவில்
சத்தங்கள்
அம்மம்மா
விரல்பாட்டு
என் அப்பா ஏதோ...
பண்ணை
தொக்கை மனிதா
பொம்மை
சிவப்பும் பச்சையும்
பாட்டி வீடு
மழை
நண்டும் வண்டும்
பயணம் போவோமே
Train
நாய்க்குட்டி
கரடி



## பயணம் போவோமே

பயணம் போவோமே - நாங்கள்
பயணம் போவோமே
மூவருமாக மாமியின் வீட்டுக்கு
பயணம் போவோமே

தூரம் போவோமே - நீண்ட
தூரம் போவோமே
ஆடிப் பாடி வேடிக்கையாக
பயணம் போவோமே.

## TRAIN

Train வருகுது - அங்கே
Train வருகுது
சிக் புக் சிக் புக் சிக் புக் சிக் புக்
Train வருகுது
Train...

மணி அடிக்குது - கேற்
மணி அடிக்குது
டொங் டொங் டொங் டொங்
கேற் விழுகுது
Train...

கார்கள் நிற்குது - எங்கும்
கார்கள் நிற்குது
வரிசை வரிசை வரிசையாக
கார்கள் நிற்குது
Train...

## நாய்க்குட்டி

நாய்க்குட்டி நாய்க்குட்டி
என்னுடைய நாய்க்குட்டி
ஓடி வா விளையாடு
துள்ளித் துள்ளி விளையாடு
நாய்க்குட்டி...

தூக்குவேன் கொஞ்சுவேன்
மெல்ல மெல்லத் தடவுவேன்
ஓடுவேன் ஆடுவேன்
உன்னோடு விளையாடுவேன்
நாய்க்குட்டி....

## நண்டும் வண்டும்

நண்டு வந்தது – பெரிய
நண்டு வந்தது
நொண்டி நொண்டிப் பசியுடனே
நண்டு வந்தது

*

வண்டு கண்டது – சின்ன
வண்டு கண்டது
நொண்டி நொண்டி வந்த நண்டை
வண்டு கண்டது

*

வண்டு கேட்டது – "தேன்
கொண்டு வரட்டுமா?
பூக்களிலே தேன் எடுத்து
வந்து தரட்டுமா?"

*

"வண்டு நண்பனே – உதவ
வந்த நண்பனே
சொட்டுச் சொட்டுத் தேன் குடித்து
வயிறு நிரம்புமா?"

*

"நண்டு நண்பனே – நீர்
உண்டு மகிழவே
என்ன வேணும் என்று சொன்னால்
கொண்டு வருவேனே!"

*

"குண்டு போலவே – நல்ல
வண்டு வேணுமே
உம்மைப் போலக் குண்டு வண்டு
ஒன்று வேணுமே"

*

"கண்டு கொண்டேனே – உமது
கள்ள யோசனை
நின்று கொள்ளும் நின்று கொள்ளும்
சென்று வருகிறேன்"



## வாருங்கள்

வாருங்கள் வாருங்கள்
ஒன்று சேருங்கள்
பாப்பா பாரதி
வந்து பாருங்கள்

ஆடுவோம் பாடுவோம்
விளை யாடுவோம்
நாடகம் ஆடுவோம்
கதை கூறுவோம்
வாருங்கள்....

## வானவில்

அம்மா வாருங்கோ
அப்பா வாருங்கோ
ஓடி வாருங்கோ
மேலே பாருங்கோ

வானவில் அங்கே!
வடிவைப் பாருங்கோ!
மேலே போய் அதை
பிடித்து வாருங்கோ!

## சத்தங்கள்

நாய் குரைக்குது...
வவ்! வவ்!
பூனை கத்துது...
மியாவ்! மியாவ்!
குருவிச் சத்தம்...
கீ! கீ!
சின்னப் பிள்ளை...
ஞாய்! ஞாய்!

*

காற்றடிக்குது...
ஸ்! ஸ்!
மழை பெய்யுது...
சோ! சோ!
இடி இடிக்குது...
டும்! டும்!
நாங்கள் எல்லாம்...
ஹோ! ஹோ!

## அம்மம்மா

அம்மம்மா என் அம்மம்மா
அருமையான அம்மம்மா
என்னை விரும்பும் அம்மம்மா
இனிக்கும் எனது அம்மம்மா
அம்மம்மா....

என்னைக் கண்டால் சிரித்திடுவா
எடுத்து முத்தம் கொடுத்திடுவா
நல்ல நல்ல கதையெல்லாம்
நாளும் எனக்குச் சொல்லிடுவா
அம்மம்மா...

எங்கும் கூட்டிச் சென்றிடுவா
எல்லாம் எனக்குக் காட்டிடுவா
என்னைத் தூங்க வைப்பதற்கு
இனிய பாட்டுப் பாடிடுவா
அம்மம்மா....

## விரல் பாட்டு

ஒன்றிது இரண்டிது
மூன்று விரல் இது
நாலிது ஐந்திது
ஆறு விரல் இது
ஏழிது எட்டிது
ஒன்பது விரல் இது
பத்து விரல்களும்
பாருங்கோ!

## அப்பா ஏதோ....

- என் அப்பா ஏதோ வாங்கி வந்தார்
  என்ன வாங்கி வந்தார்?
= சொக்லட்
- அது இல்லை
= பிஸ்கற்
- அது இல்லை
= ஐஸ் கிறீம்
- அது இல்லை
  என்ன வாங்கி வந்தார்?

*

- என் அப்பா ஏதோ வாங்கி வந்தார்
  என்ன வாங்கி வந்தார்?
= பட்டம்
- அது இல்லை
= சட்டை
- அது இல்லை
= முட்டை
- அது இல்லை
  என்ன வாங்கி வந்தார்?

*

- என் அப்பா ஏதோ வாங்கி வந்தார்
  என்ன வாங்கி வந்தார்?
= பம்பரம்
- அது இல்லை
= மத்தளம்
- அது இல்லை
= புத்தகம்
- அது இல்லை
  என்ன வாங்கி வந்தார்?

*

- என் அப்பா ஏதோ வாங்கி வந்தார்
  என்ன வாங்கி வந்தார்?
  அது ஒரு நாய்க்குட்டி
  அது ஒரு நாய்க்குட்டி
  அது ஒரு நாய்க்குட்டி
  உண்மையான நாய்க்குட்டி.



*

பச்சை வந்தது
சிவப்பு ஒளித்தது...
பச்சை வந்தது
சிவப்பு ஒளித்தது...

*

பச்சை சொன்னது
போ! போ! போ!
பச்சை சொன்னது
போ! போ! போ!

*

கார் போனது
பஸ் போனது
வான் போனது
றக் போனது.

## பாட்டி வீடு

பாட்டி வீடு போவேனே - நான்
பாட்டி வீடு போவேனே
காட்டுக்குள்ளே பாட்டுகள் பாடி
பாட்டிக்காகப் பூக்களும் தேடி
பாட்டி......

சின்னக் குருவி சுகம் எப்படி
வண்ணத்துப் பூச்சி வா இப்படி
பதுங்குகின்ற முயற் குட்டியே!
துள்ளி ஓடும் மான் குட்டியே!
பாட்டி.....

## மழை

மழை மழை மழை பெரு மழை
கொழ கொழ வென விழும் மழை
இலையும் கிளையும் தோயுது
நிலத்திலே நீர் பாயுது

இடி இடி இடி பெரும் இடி
பட பட பட கடும் இடி
வானில் ஏதோ வெடிக்குது
மின்னல் வெளிச்சம் அடிக்குது
ஹோ ஹோ ஹோ பெரும் புயல்
வேகமான கடும் புயல்
மரங்கள் சரியப் போகுது
கூரை பறக்கப் போகுது

= இங்கே இருக்கிறம்
இங்கே இருக்கிறம்
- எப்படி உங்கள் சுகம்?
= மிகவும் நல்ல சுகம்

- விளையாடுங்கோ விளையாடுங்கோ
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!

## பொம்மை

பொம்மை வாங்குங்கோ - மாமா
பொம்மை வாங்குங்கோ
கடையிலே போய் எனக்கு ஒரு
பொம்மை வாங்குங்கோ
கையை ஆட்டும் பொம்மை
காலைத் தூக்கும் பொம்மை
கண்ணை முழிக்கும் பொம்மை
கதைக்கத் தெரிந்த பொம்மை
பொம்மை

*

தொட்டிக்குள்ளே போட்டு
குளிக்க வைக்க வேணும்
சட்டை மாற்ற வேணும்
தலையை வார வேணும்
பொம்மை

*

சோறு கறி ஆக்கி
மெல்ல ஊட்ட வேணும்
ஆரிரரோ பாடி
தூங்க வைக்க வேணும்
பொம்மை

## சிவப்பும் பச்சையும்

சிவப்புச் சொன்னது
நில்! நில்! நில்!
சிவப்புச் சொன்னது
நில்! நில்! நில்!

*

கார் நின்றது
பஸ் நின்றது
வான் நின்றது
றக் நின்றது



## பண்ணை

பென்னம் பெரிய ஒரு பண்ணை
லா லா லல லல் லா
பண்ணைக்குள் பல வாத்துக்கள்
லா லா லல லல் லா
ஒரு 'குவாக்' இங்கே
ஒரு 'குவாக்' அங்கே
இங்கே 'குவாக்' அங்கே 'குவாக்'
எங்கும் எங்கும் 'குவாக்' 'குவாக்'
பென்னம் பெரிய ஒரு பண்ணை
லாலா லல லல் லா

*

பென்னம் பெரிய ஒரு பண்ணை
லா லா லல லல் லா
பண்ணைக்குள் பல ஆடுகள்
லா லா லல லல் லா
ஒரு 'பாய்' இங்கே
ஒரு 'பாய்' அங்கே
இங்கே 'பாய்' அங்கே 'பாய்'
எங்கும் எங்கும் 'பாய்' 'பாய்'
பென்னம் பெரிய ஒரு பண்ணை
லாலா லல லல் லா

*

பென்னம் பெரிய ஒரு பண்ணை
லா லா லல லல் லா
பண்ணைக்குள் பல பன்றிகள்
லா லா லல லல் லா
ஒரு 'ஒய்ங்' இங்கே
ஒரு 'ஒய்ங்' அங்கே
இங்கே 'ஒய்ங்' அங்கே 'ஒய்ங்'
எங்கும் எங்கும் 'ஒய்ங்' 'ஒய்ங்'
பென்னம் பெரிய ஒரு பண்ணை
லாலா லல லல் லா

*

பென்னம் பெரிய ஒரு பண்ணை
லா லா லல லல் லா
பண்ணைக்குள் பல குதிரைகள்
லா லா லல லல் லா
ஒரு 'நேய்' இங்கே
ஒரு 'நேய்' அங்கே
இங்கே 'நேய்' அங்கே 'நேய்'
எங்கும் எங்கும் 'நேய்' 'நேய்'
பென்னம் பெரிய ஒரு பண்ணை
லாலா லல லல் லா

## தொக்கை மனிதா

\- தொக்கை மனிதா தொக்கை மனிதா
எங்கே இருக்கின்றாய்?
எங்கே இருக்கின்றாய்?

= இங்கே இருக்கிறேன்
இங்கே இருக்கிறேன்

\- எப்படி உனது சுகம்?
= மிகவும் நல்ல சுகம்

\- சரி சரி ஓடு
சரி சரி ஓடு

ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!

\- சுட்டி மனிதா சுட்டி மனிதா
எங்கே இருக்கின்றாய்?
எங்கே இருக்கின்றாய்?

= இங்கே இருக்கிறேன்
இங்கே இருக்கிறேன்

\- எப்படி உனது சுகம்?
= மிகவும் நல்ல சுகம்

\- சரி சரி ஓடு
சரி சரி ஓடு

ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!

*

\- நெட்டை மனிதா நெட்டை மனிதா
எங்கே இருக்கின்றாய்?
எங்கே இருக்கின்றாய்?

= இங்கே இருக்கிறேன்
இங்கே இருக்கிறேன்
\- எப்படி உனது சுகம்?
= மிகவும் நல்ல சுகம்



\- சரி சரி ஓடு
சரி சரி ஓடு

ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!

*

\- மோதிர மனிதா மோதிர மனிதா
எங்கே இருக்கின்றாய்?
எங்கே இருக்கின்றாய்?

= இங்கே இருக்கிறேன்
இங்கே இருக்கிறேன்

\- எப்படி உனது சுகம்?
= மிகவும் நல்ல சுகம்

\- சரி சரி ஓடு
சரி சரி ஓடு

ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!

*

\- சின்ன மனிதா சின்ன மனிதா
எங்கே இருக்கின்றாய்?
எங்கே இருக்கின்றாய்?

= இங்கே இருக்கிறேன்
இங்கே இருக்கிறேன்

\- எப்படி உனது சுகம்?
= மிகவும் நல்ல சுகம்

\- சரி சரி ஓடு
சரி சரி ஓடு

ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!
ஹ ஹ் ஹா ஹ ஹ ஹ ஹ் ஹா!

\- எல்லா மனிதரும் எல்லா மனிதரும்
எங்கே இருக்கிறீங்கள்?
எங்கே இருக்கிறீங்கள்?